|| ஸ்ரீ :||

# ஏழுமலை மீது



ஏழுமலைமீது நிற்கும் வெங்கடேஸா !
ஏழைப் பங்காளனே ஸ்ரீனிவாஸா !!
ஏழுமலைமீது .....

மலைமீது உறைகின்ற உன் தனை
மலைபோல் நம்பிவரும் பக்தர்க்கு
இலை இனி துன்பங்களென்றவர்க்கு
நிலையான வாழ்வினை அருள்வாயே !!
ஏழுமலைமீது ......

அலைபோல் துன்பங்கள் வந்தாலும்
நிலையாக உன்னை நினைப்போர்க்கு
வலைபோன்ற இந்த வாழ்விலிருந்து
இலை இனி பிறவியென அருள்வாயே !!
ஏழுமலைமீது .......

இயற்றியவர்
“பொய்கையடியான்"